# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1567/23 - 2008 සැප්තැම්බර් 19 වැනි සිකුරාදා - 2008.09.19

*1567/23 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/78.

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் வட்டறேகே ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால ஆகிய நான், இலங்கை றுகுணு பல்கலைக்கழகம் தொடர்பில் காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான மேற்சொன்ன சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 1984, சனவரி 24 ஆந் திகதிய 281/7 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது அத்தகைய கட்டளையின் (iv) ஆம், (v) ஆம் பந்திகளை அத்தகைய பந்தியை உடனடுத்துப் பின்வருகின்ற நிரல் I படிவம் நிரல் II இல் அடங்கியுள்ள எல்லாப் பதிவுகளையும் சேர்த்து நீக்கம்செய்து அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன்மூலம் இக்கட்டளைமூலம் திருத்துகின்றேன்.

"(iv) அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பீடங்களைக் குறித்தொதுக்குகின்றேன்:-

(அ) விவசாய பீடம் ;

(ஆ) பொறியியல் பீடம் ;

(இ) கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ;

(ஈ) மனிதவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் ;

(உ) முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடம் ;

(ஊ) மருத்துவ பீடம் ;

(எ) விஞ்ஞான பீடம் ; அத்துடன்

(v) பந்தி (iv) இன்கீழ் பல்கலைக்கழகத்திற்கு குறித்தொதுக்கப்பட்டதும் கீழே தரப்பட்ட அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்தொதுக்கப்பட்டதும் அத்தகைய பல்கலைக்கழகத்தின் பீடம் ஒவ்வொன்றும் II ஆம் நிரலில் அத்தகைய ஒவ்வொரு

பீடத்திற்கும் நேரொத்த பதிவுகளில் குறித்தொதுக்கப்படுகின்றதுமான கற்கைத் துறைகளை உள்ளடக்குதல் வேண்டுமென குறித்துரைக்கின்றேன்:-

**அட்டவணை**

| நிரல் I<br>பீடம் | நிரல் II<br>துறைகள் |
|---|---|
| விவசாய பீடம் | 1. விவசாய உயிரியல் துறை |
| | 2. விவசாய பொருளியல் துறை |
| | 3. விவசாய பொறியியல் துறை |
| | 4. விலங்கியல் விஞ்ஞானத் துறை |
| | 5. தாவர விஞ்ஞானத் துறை |
| | 6. உணவு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் துறை |
| | 7. நிலத்தியல் விஞ்ஞானத் துறை |
| பொறியியல் பீடம் | 1. குடிசார் மற்றும் சூழல் பொறியியல் துறை |
| | 2. மின் மற்றும் தகவல் பொறியியல் துறை |
| | 3. துறைகளுக்கிடையிலான ஒழுக்காற்றுக் கற்கைகள் துறை |
| | 4. இயந்திரவியல் மற்றும் உற்பத்திப் பொறியியல் துறை |
| கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பீடம் | 1. கடற்றொழில் மற்றுாம் நீரியல் பொருட்களைப் பண்டுபடுத்துதல் துறை |
| | 2. நன்னீரியல் வளத் துறை |
| | 3. சமுத்திரவியல் மற்றும் கடற்சரிதவியல் துறை |
| மனிதவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 1. பொருளியல் துறை |
| | 2. புவியியல் துறை |
| | 3. சரித்திரம் மற்றும் தொல்பொருளியல் துறை |
| | 4. பாளி மற்றும் பௌத்த கல்வித் துறை |
| | 5. சிங்களத் துறை |
| | 6. சமூகவியல் துறை |
| முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடம் | 1. கணக்கியல் மற்றும் நிதித் துறை |
| | 2. முகாமைத்துவம் மற்றும் முயற்சியாளர் நலனியற் துறை |
| | 3. சந்தைப்படுத்தற் துறை |
| மருத்துவ பீடம் | 1. உடற் கூற்றியல் துறை |
| | 2. உயிரியல் இரசாயனத் துறை |
| | 3. சமூக மருத்துவத் துறை |
| | 4. சட்டமருத்துவம் மற்றும் தடையப்பகுப்பாய்வியல் துறை |
| | 5. மருத்துவத் துறை |
| | 6. நுண்ணுயிரியல் துறை |
| | 7. மகப்பேற்றியல் மற்றும் பெண்ணியல் மருத்துவத் துறை |
| | 8. ஒட்டுண்ணியியல் துறை |
| | 9. நோய் பகுப்பாய்வியல் துறை |
| | 10. குழந்தையியல் மருத்துவத் துறை |
| | 11. மருந்தியல் துறை |
| | 12. உடல் தொழில்பாட்டியல் துறை |
| | 13. உளநோயியல் துறை |
| | 14. அறுவை சிகிச்சையியல் துறை |

| நிரல் I<br>பீடம் | நிரல் II<br>துறைகள் |
|---|---|
| விஞ்ஞான பீடம் | 1. தாவரவியல் துறை |
| | 2. இரசாயனத் துறை |
| | 3. கணனி விஞ்ஞானத் துறை |
| | 4. கணிதத் துறை |
| | 5. பௌதிகத் துறை |
| | 6. விலங்கியல் துறை.". |

பேராசிரியர் வட்டறேகே ஆராச்சிலாகே விஸ்வ வர்ணபால,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2008.09.10

10-191

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.